**கோயம்புத்தூர் வணிக வழக்குகள் நீதிமன்றம் (மாவட்ட நீதிபதி நிலை), கோயம்புத்தூர்**

**COS.No. 33 of 2025**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13ம் நாள் வெள்ளிக்கிழமை 1969ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின் திரு.கி.ஹரிகரன், எம்.எல்., நீதிபதி, வணிக வழக்குகள் நீதிமன்றம், (மாவட்ட நீதிபதி நிலை), கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | DW1–Mr.Lakshmana Prabu Balasubramanian | **கிராமம்:** | |
| **த.பெ.** | Mr.A.K.Balasubramanian | **வேலை:** | |
| **வயது** | 47 | **செல்போன் எண்** | |

**முதல் விசாரணை:**

**என் பெயர் லக்ஷ்மணபிரபு பாலசுப்ரமணியன், வயது 47, த/பெ.A.K.பாலசுப்ரமணியன். நான் தாக்கல் செய்துள்ள ஆணையுறுதி பத்திரத்தில் உள்ள வாசகங்கள் உண்மை என்றும், சரி என்றும் உறுதியளிக்கிறேன். அதை என் தரப்பு முதல் விசாரணையாக தாக்கல் செய்கிறேன். மேலும், என் தரப்பில் பின்வரும் ஆவணங்களை தாக்கல் செய்து குறியீடு செய்ய வேண்டுகிறேன்.**

**1) 24.01.2022– வாதியால் 6–வது பிரதிவாதிக்கு 24.01.2022 அன்று அனுப்பப்பட்ட மின்னஞ்சல் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட எக்சல் சீட் (Excel Sheet) – இணையநகல்**

மேற்கண்ட ஆவணம் வாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆவண ஏற்பு மற்றும் மறுப்புரையில் கண்டுள்ள ஆட்சேபனைகளுக்குட்பட்டு பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் B.Com. படித்துள்ளேன்.

இவ்வழக்கின் எட்டாம் பிரதிவாதி திரு.கார்த்திக் எனது சகோதரர்.

ஏழாம் பிரதிவாதி திரு.கனகாசலம் என் மாமா.

ஏழாம் பிரதிவாதியை தம்பி என்றும் அழைப்பார்கள் என்றால் சரிதான்.

முதல் பிரதிவாதி நிறுவனத்தில் நானும், எட்டாம் பிரதிவாதியும், என் தாயாரும் இயக்குனர்கள்.

இரண்டாம் பிரதிவாதி நிறுவனத்தில் நானும், என் சகோதரரும், என் தாயாரும் இயக்குனர்கள்.

மூன்றாம் பிரதிவாதி நிறுவனம் ஒரு Partnership firm, அதில் பிரதிவாதிகள் 7, 8, என் தாயார் மற்றும் என் அத்தை ஆகியோர் அதில் கூட்டாளிகள்.

நான்காம் பிரதிவாதி நிறுவனம் ஒரு Partnership firm, அதில் நான், எனது அம்மா, என் மாமா மற்றும் என் தம்பி கார்த்திக் ஆகியோர் கூட்டாளிகள்.

ஐந்தாம் பிரதிவாதி நிறுவனத்தில் நானும், 7, 8 பிரதிவாதிகளும் கூட்டாளிகள்.

ஒன்று முதல் ஐந்து பிரதிவாதி நிறுவனங்கள் உங்கள் குடும்ப தொழில் நிறுவனங்கள் என்று சொன்னால் சரிதான்.

1 முதல் 5 பிரதிவாதி நிறுவனங்களுக்கும் பொதுவான பணியாளர்கள் தான் இருக்கிறார்கள் என்று சொன்னால் சரிதான், பொதுவான

பணியாளர்கள்தான் இருக்கிறார்கள், ஒன்று முதல் நான்கு பிரதிவாதி நிறுவனங்களுக்கு ஒரே பணியாளர்கள் தான், ஐந்தாம் பிரதிவாதி நிறுவனத்திற்கு வேறு பணியாளர்கள் தனியாக இருக்கிறார்கள்.

ஒன்று முதல் ஐந்து பிரதிவாதி நிறுவனத்திற்கும் சேர்த்து எங்கள் நிறுவனத்தில் சுமார் 1000 நபர்கள் பணியில் இருக்கிறார்கள்.

நீங்கள் JSW Steels நிறுவனத்தின் Distributor என்று சொன்னால் சரிதான்.

வாதி JSW Steels நிறுவனத்தில் பணியில் இருந்தவர், அவ்வாறு பணியில் இருக்கும் போது தான் அவருக்கும் உங்களுக்கும் அறிமுகம் கிடைத்தது என்று சொன்னால் சரிதான்.

2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பிரதிவாதி உங்கள் நிறுவனத்தில் consultant–ஆக பணியில் சேர்ந்தார் என்று சொன்னால் சரிதான்.

பிரதிவாதி நிறுவனமான 1 முதல் 5 நிறுவனத்திற்கும் சேர்த்துதான் வாதி consultant–ஆக பணிகளை செய்துகொடுத்தார் என்று சொன்னால் சரிதான்.

வாதி உங்கள் நிறுவனத்தில் consultant–ஆக பணியாற்றுவதற்கு முன்னர் consultant என்ற நிலையில் வேறு நபர்கள் யாரும் ஒன்று முதல் ஐந்து பிரதிவாதி நிறுவனங்களில் பணியாற்றியது இல்லை என்று சொன்னால் சரிதான்.

பிரதிவாதி நிறுவனத்தில் வாதி பணிக்கு சேரும்போது ஐந்து நிறுவனங்களுக்கும் சேர்த்து ஆண்டிற்கு ரூபாய் 57 லட்சம் பிரதிவாதிக்கு வழங்குவதாக நீங்கள் ஒப்புக் கொண்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

எவ்வளவு தொகை தருவதாக நீங்கள் அவரிடம் பேசி உள்ளீர்கள் அல்லது பேசி இருந்தீர்கள் என்று சொன்னால் பிரதிவாதி MRF நிறுவனத்தில் பணியில் இருந்து வந்தார், அவ்வாறு அவர் பணியில் இருந்து வந்து சென்னைக்கு தான் இடம்பெயர விரும்புவதாக கூறி வந்தார், அவ்வாறு என்னிடம் கூறிய போது நான் அவரிடம் இங்கு வந்து consultant–ஆக பணிகளை தொடங்குங்கள், வந்த பிறகு நாம் பேசிக் கொள்ளலாம் என்றுதான் கூறியிருந்தேன்.

எதிர்வழக்குரையில் உங்கள் இருவருக்குள்ளும் தொகை எதுவும் பிரதிவாதி consultant–ஆக உங்கள் நிறுவனத்தில் பணியில் சேரும்போது நிர்ணயம் செய்யப்படவில்லை என்பதை குறிப்பிடவில்லை என்று சொன்னால் கேட்கவில்லை என்பதால் குறிப்பிடவில்லை.

வாதிக்கும், உங்களுக்கும் இடையே எழுத்துப்பூர்வமான ஒப்பந்தங்கள் எதுவும் எழுதிக் கொள்ளப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

ஒவ்வொரு மாதமும் வாதிக்கு 3.75 லட்சம் fixed retainer fee என்று நிர்ணயம் செய்யப்பட்டதை ஒப்புக்கொள்கிறீர்களா என்றால் fixed retainer fee என்று கூற முடியாது, consultant–ஆக அவருக்கான தொகையாக முடிவு செய்து நாங்கள் கொடுத்து வந்தோம், அவரும் எதுவும் கேட்கவில்லை.

3.75 லட்சம் ரூபாய் பிரதிவாதிக்கு அவர் பணியாற்றிய 26 மாதத்தில் எத்தனை மாதங்களுக்கு அவருக்கு கொடுத்தீர்கள் என்று கணக்குகள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை.

எத்தனை மாதங்களுக்கு கொடுத்தீர்கள் என்று ஞாபகம் இருக்கிறதா என்றால் ஞாபகம் இல்லை.

3.75 லட்சம் ரூபாய் வாதிக்கு நீங்கள் retainer fee–ஆக கொடுக்க வேண்டும் என்று வாதி வழக்குரையில் குறிப்பிட்டிருந்ததை நீங்கள்

எதிர்வழக்குரையில் மறுக்கவில்லை என்று சொன்னால் சரி, மறுக்கவில்லை.

பிரதிவாதி நிறுவனங்கள் ஒன்று முதல் ஐந்தில் வாதி consultant–ஆக பணியிலிருந்த சமயத்தில் அவருக்கு மாத மாதம் எவ்வளவு தொகை வழங்கப்பட்டது என்று காண்பிப்பதற்கு உங்களிடம் ஆவணங்கள் இருக்கிறது, ஆனால் அதை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

பிரதிவாதிக்கு செலுத்தப்பட்ட தொகைகள் குறித்தான ஆவணங்களை தாக்கல் செய்தால் உண்மை தெரிந்து விடும் என்பதற்காக அந்த ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யாமல் விட்டுவிட்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

நீங்கள் பிரதிவாதிக்கு சேர வேண்டிய 3.75 லட்சம் ரூபாயில் 2.40 லட்சம் அவருடைய வங்கி கணக்கிலும், 1.35 லட்சம் பணமாக தான் தர முடியும் என்று கூறி அவரிடம் நீங்கள் நேரடியாக பணமாக கொடுத்தீர்கள் என்று சொன்னால் சரியல்ல, நான் அவ்வாறு கூறவில்லை.

நீங்கள் consultant–ஆக பணியாற்றி வரும் வாதி தவிர உங்களிடம் உங்கள் நிறுவனத்தில் பணியாற்றி வரும் மற்ற பணியாளர்களுக்கும் நீங்கள் மாதச்சம்பளத்தை பகுதியாக வங்கியிலும், பகுதியாக பணமாகவும் தான் செலுத்தி வருகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

வாதி உங்கள் நிறுவனத்தில் consultant–ஆக பணியில் சேரும்போதே வாதிக்கு 5 நிறுவனங்களுக்கும் சேர்த்து அவருடைய Consultant fee கட்டணமாக ரூபாய் 57 லட்சம் நிர்ணயம் செய்யப்பட்டது என்று சொன்னால் Consultant fee என்பது based on performance, அவரது performance பார்க்காமல் அவரது கட்டணத்தை நிர்ணயம் செய்யமுடியாது.

ரூபாய் 3.75 லட்சம் என்ற தொகை 12 மாதங்களுக்கு கணக்கிடும் போது கூட்டாக ரூபாய் 45 லட்சம் வருகிறது, இது தவிர பாக்கி உள்ள ரூபாய் 12 லட்சம் தொகையினை நீங்கள் இரு தவணைகளாக ரூபாய் 5 லட்சம் ஒரு முறையும், ரூபாய் 7 லட்சம் ஒரு முறையும் தருவதாக தெரிவித்திருந்தீர்கள், அவ்வாறு அந்த தொகைகளை நீங்கள் வாதிக்கு கொடுக்காமல் விட்டு விட்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

எதிர்வழக்குரை பத்தி 6 ல் ஒரு order என்று ஒன்றை குறிப்பிட்டு தெரிவித்துள்ளீர்கள், அந்த order என்று கூறுவது எதை குறிக்கிறது என்று சொன்னால் அந்த order என்று எதுவும் குறிப்பிட்டு கூற முடியாது.

நீங்கள் எந்த பணியாளர்களுடனும் ஒப்பந்தம் எதுவும் எழுதிக் கொள்வதில்லை, உங்கள் நிறுவன நிர்வாகம் professionally managed–ஆக இருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, நாங்கள் எங்கள் பணியாளர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கி வருகிறோம்.

வாதி போன்று பல பணியாளர்களுக்கு உங்கள் நிறுவனத்தில் இருந்து அவர்களுக்கு சேர வேண்டிய தொகைகளை முழுமையாக வழங்காததால் அவர்களில் பலர் உங்களுக்கு சட்ட அறிவிப்பு பணம் கேட்டு கொடுத்து வருகிறார்கள், அவர்களில் ரமேஷ் என்பவரும் ஒருவர் என்று சொன்னால் பொதுவாக எங்கள் நிறுவனத்தில் பணியாற்றி வரும் ஊழியர் ஒருவர் பணியில் இருந்து நிற்கும் போது அவரிடம் இருந்து முறையாக நாங்கள் Exit Form வாங்குகிறோம், ஆனால் எங்கள் நிறுவன பணியில் இருந்து சொல்லாமல் ஒருவர் நின்று விட்டால் அவரிடமிருந்து நாங்கள் எந்த ஆவணமும் வாங்க இயலாது.

நவம்பர் மாதம் 2021 இல் உங்கள் நிறுவனங்களுக்காக வாதி பணியாற்றுவதை நிறுத்திவிட்டார் என்று சொன்னால் சரிதான்.

Ex.A.1, 16.01.2021 தேதியில் இந்த whatsapp conversation ஆரம்பித்து 13.12.2021 வரை செய்திகள் அனுப்பப்பட்டுள்ளது (என்று சாட்சியிடம் ஆவணம் காண்பித்து கேட்கப்பட்டது, சாட்சி அந்த ஆவணத்தை பார்த்தார்) என்றால் சரிதான்.

Ex.A.1 ஆவணத்தில் உங்களுக்கும், வாதிக்கும் இடையே பரிமாறிக்கொள்ளப்பட்ட செய்திகளில் எந்த இடத்திலாவது வாதியின் பணிகளில் குறை இருப்பதாகவும் அல்லது வாதி உங்கள் நிறுவனத்திற்கு எதிராக செயல்படுகிறார் என்றோ எந்த செய்தியிலும் இடம் பெறவில்லை என்று சொன்னால் அதுபோன்று ஒரு discussion Whatsapp Chat–இல் நடக்கவில்லை.

Ex.A.2 to Ex.A.5 e–mail களில் வாதியிடம் நீங்கள் அனுப்பிய e–mail களில் எதிலாவது வாதி உங்கள் நிறுவனத்திற்கு எதிராக செயல்பட்டார் என்று எந்த இடத்திலாவது ஒரு குற்றச்சாட்டு சொல்லி உள்ளீர்களா என்றால் அது குறித்த discussion எதுவும் எங்களுக்குள் இல்லை.

Ex.A.1 ஆவணத்தில் 13.12.2021 தேதியில் வாதி உங்களுக்கு ஒரு செய்தி அனுப்பியுள்ளார், அப்போது வாதி உங்கள் நிறுவனத்தில் இருந்து தனக்கு வரவேண்டிய பாக்கிதொகை உள்ளது என்றும், அதை settle செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான்.

அதற்கு நீங்கள் பதிலாக ஆறு நிமிடம் கழித்து நீங்கள் அதற்குரிய details நீங்கள் free ஆக இருக்கும் போது அனுப்புங்கள், பணம் அனுப்புகிறேன் என்று பொருள் கொள்ளுமாறு Will send என்று நீங்கள் பதில் அளித்துள்ளீர்கள் என்று சொன்னால் அக்டோபர் மாதம் வரை அவர்

பணியாற்றியுள்ளார், அக்டோபர் மாதத்திற்கான தொகையை குறிப்பிடுகிறார் என்று நான் அனுப்பி வைத்தேன்.

ரூபாய் 25.75 லட்சம் உங்களிடமிருந்து தனக்கு வர வேண்டும் என்று வாதி குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

நீங்கள் வாதி கொடுத்திருந்த Excel Sheet–ல் கூறியிருந்த ரூபாய் 25.75 லட்சம் பாக்கி தரவேண்டும் என்று குறிப்பிட்டிருந்ததை மறுத்து நீங்கள் பதில் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் ஒரு இடத்தில் நான் சொல்லியுள்ளேன்.

03.01.2022 தேதியில் நீங்கள் தொகையை எனக்கு கொடுத்தால் எனக்கு மருத்துவ செலவுகளுக்கு உபயோகமாக இருக்கும் என்று வாதி Whatsapp குறுஞ்செய்தியில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

அதே தேதியில் பதிலாக நீங்கள் Surely will do the needful என்று Whatsapp–ல் பதில் கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான்.

10.03.2022 தேதியில் will take the accounts and one day we will meet and close it sir என்று நீங்கள் ஒரு whatsapp செய்தி அனுப்பியுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான்.

14.03.2022, 17.03.2022, 18.03.2022 ஆகிய தேதிகளில் உங்களுக்குள் pending payment issue சம்மந்தமாக whatsapp chat நடந்துள்ளது என்று சொன்னால் சரி, நடந்துள்ளது.

18.03.2022 தேதியில் pending this Diwali amount and annual component part will discuss with Thambi and let you know sir என்று ஒரு செய்தி அனுப்பி உள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான்.

அடுத்த செய்தியில் நீங்கள் monthly part is settled sir என்று நீங்கள் ஒரு செய்தி அனுப்பியுள்ளீர்கள் என்றால் சரிதான்.

அதற்கு வாதி kindly do it as soon as possible என்று உங்களுக்கு பதில் செய்தி அனுப்பியுள்ளார், அதற்கு நீங்கள் sure sir என்று பதில் அளித்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான்.

வாதி தொடர்ந்து உங்களிடம் அதை கேட்டு வந்த நிலையில் 07.04.2022 தேதியில் நீங்கள் எனக்கு தொடர்ந்து குறுஞ்செய்திகள் அனுப்ப வேண்டாம் என்றும், நீங்கள் இது சம்பந்தமாக Thambi sir இடம் தெரிவித்துக் கொள்ளுங்கள் என்றும் நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள் என்று சொன்னால் I am on the job, நான் consultant-க்கு இதுபோன்று அவர் கோரும் தொகை கொடுக்கக்கூடியதா என்பது குறித்து discuss செய்து கொடுக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு நான் தெரிவித்தேன்.

19.04.2022 தேதியில் வாதிக்கு நீங்கள் ஒரு குறுஞ்செய்தி discuss with Thambi Sir என்று அனுப்பியுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான்.

24.01.2022 முதல் 01.11.2022 வரை வாதி உங்களுக்கு பல e-mail அனுப்பியுள்ளார் என்று சொன்னால் சரிதான்.

அனைத்து e-mail-களிலும் பாக்கித்தொகை குறித்துதான் உங்களுக்கு அவர் mail அனுப்பியுள்ளார் என்று சொன்னால் சரிதான்.

வாதி சுமார் 15 e-mail அனுப்பியுள்ளார், அவ்வாறு அவர் அனுப்பியிருந்த பதினைந்து e-mail-களில் ஒரு e-mail-க்கு கூட நீங்கள் பதிலும் அனுப்பவில்லை, அவர் கேட்டதை மறுக்கவும் இல்லை என்று சொன்னால் இல்லாததை அவர் கேட்டதால் அவருக்கு பதில் அனுப்பவில்லை.

இல்லாததை வாதி கேட்கவில்லை, அவருக்கு சேர வேண்டிய தொகையைதான் வாதி உங்களிடம் e-mail மூலமாக கேட்டார், வாதிக்கு அந்த தொகையை கொடுக்கக்கூடாது, தட்டிக் கழிக்க வேண்டும்

என்பதற்காகதான் நீங்கள் பதில் எதுவும் கொடுக்காமல் இருந்துவிட்டீர்கள் என்று சொன்னால் ஒப்பந்தமே இல்லை, அதனால் அவர் கேட்பது ஏற்புடையது அல்ல.

வாதி உங்களுக்கு e-mail அனுப்பியது போன்று உங்களுடைய மாமா கனகாசலம் என்ற தம்பி என்பவருக்கும் e-mail-கள் அனுப்பியுள்ளார் என்று சொன்னால் சரிதான்.

27.04.2022 தேதியில் அனுப்பப்பட்ட e-mail செய்தியில் இதுபோன்ற ஒரு issue இருப்பதே எனக்கு தெரியாது, இருந்திருந்தால் என்னுடைய கவனத்திற்கு கொண்டு வந்திருக்கலாம் என்றும், மேலும் அதை தான் பார்ப்பதாகவும், அதை சரிசெய்து கொள்ளலாம் என்றும் பதில் அளித்துள்ளார் என்று சொன்னால் இந்த e-mail பற்றி எனக்கு தெரியாது.

நீங்கள் கூறியதன் அடிப்படையில் உங்கள் மாமாவிடத்திலும் வாதி பணத்தை கேட்டபோது அவரும் சரிவர பதில் அளிக்கவில்லை என்று சொன்னால் இல்லாததை கேட்டால் அவராலும் பதில் அளிக்க முடியாது.

வாதி மீது மிகுந்த மதிப்பு உள்ளதாக உங்கள் மாமா அவரது e-mail செய்தியில் குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரி, அது எனக்கு தெரியாது, ஆனால் 27.04.2022 தேதியிட்ட e-mail செய்தியில் அவ்வாறு உள்ளது.

வாதிக்கு பாக்கியுள்ள இந்த தொகை குறித்தான பிரச்சனையை தான் தீர்த்து வைப்பதாகவும் உங்கள் மாமா ஒரு உத்தரவாதம் கொடுத்திருந்தார் என்று சொன்னால் எனக்கு தெரியாது, அவர்களுக்குள் நடந்த discussion பற்றி எனக்கு தெரியாது.

திரு.பாலசுப்பிரமணியம் என்பவர் வாதி எங்கள் நிறுவனத்தில் பணியில் இருந்து நின்ற பிறகு Vice President நிலையில் பணியில் சேர்ந்தார் என்று சொன்னால் சரிதான்.

திரு.பாலசுப்பிரமணியத்திடம் வாதி அவருக்கு சேரவேண்டிய பாக்கிதொகை குறித்து கேட்ட விபரங்கள் உங்களுக்கும் தெரியும் என்று சொன்னால் சரி, தெரியும்.

திரு.பாலசுப்பிரமணியம் அவருக்கு வாதியிடமிருந்து கிடைக்கும் e–mail குறித்தும், அவர் வாதிக்கு கொடுத்த பதில்கள் குறித்தும் உங்களிடம் உடனடியாக update செய்வார் என்றால் தினமும் செய்ய மாட்டார், copy mark செய்திருந்தால் எனக்கு தெரியும்.

18.07.2022 தேதியில் பாலசுப்பிரமணியம் சட்டப்படி நாங்கள் உங்களுக்கு என்ன தொகை பாக்கி செலுத்த வேண்டுமோ அதை செலுத்த கடமைப்பட்டவர்கள் என்று e–mail செய்தியில் குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் அது அவருடைய தனிப்பட்ட கருத்து.

இந்த காரணங்களுக்காக தான் வாதி உங்கள் நிறுவனம் professionally managed நிறுவனம் அல்ல என்று கூறுகிறார் என்றால் அவ்வாறு இருந்தால் 45 ஆண்டுகளாக இந்த நிறுவனத்தை இவ்வளவு தூரத்திற்கு வளர்த்திருக்க முடியாது.

திரு.பாலசுப்ரமணியம் வாதிக்கு அனுப்பியிருந்த e–mail–இல் உள்ள செய்தியானது உங்கள் நிறுவனத்திற்கு எதிராக இருப்பதால் அதை நீங்கள் ஏற்க மறுக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

ஜனவரி 2022 ஆம் ஆண்டு ஒரு 2 லட்சம் ரூபாய் தொகை அனுப்பியுள்ளீர்கள், அந்த தொகை வாதிக்கு சேரவேண்டிய தொகையில்

ஒரு பகுதி தொகை என்று சொன்னால் 1.75 லட்சம் நாங்கள் அனுப்ப வேண்டியிருந்தது, இரண்டு லட்ச ரூபாய் அனுப்பி வைத்தோம்.

வாதி கேட்டு வந்த 27.75 லட்சம் பாக்கி தொகையில் ரூபாய் 2 லட்சம் தான் நீங்கள் கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் இல்லை.

இந்த இரண்டு லட்ச ரூபாய் தொகை என்ன காரணத்திற்காக அனுப்பப்பட்டது என்பது குறித்து ஒரு covering letter அல்லது அனுப்பப்பட்டதற்கான காரணம் குறித்து ஒரு கடிதம் எதுவும் வாதிக்கு நீங்கள் அனுப்பியதில்லை என்று சொன்னால் சரிதான், அனுப்பியதில்லை.

08.03.2022 தேதியில் whatsapp செய்தியில் வாதி இந்த இரண்டு லட்ச ரூபாய் நீங்கள் அனுப்பியதை குறிப்பிட்டு மொத்த தொகையில்தான் அந்த இரண்டு லட்ச ரூபாய் தொகையினை தான் வரவு வைத்ததை குறிப்பிட்டு தெரிவித்துள்ளார் என்று சொன்னால் அந்த excel sheet–யை நான் accept செய்யவில்லை.

24.01.2022 e–mail ஆவணத்திலும் வாதி 25.75 லட்சம் தனக்கு பாக்கி இருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

உங்களுடைய எதிர்வழக்குரையில்தான் நீங்கள் முதல்முறையாக உங்கள் நிறுவனத்தில் இருந்து டேட்டாக்களை வாதி எடுத்துச் சென்று விட்டார் என்று நீங்கள் கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் அவரிடம் எங்கள் தரப்பில் இருந்து எந்த communication–ம் இல்லை.

நீங்கள் வாதி மீது அவர் உங்கள் நிறுவன ஆவணங்களை திருடி சென்றுவிட்டார் என்று அவர் மீது சட்டரீதியாக எந்த நடவடிக்கையும் இந்த நான்காண்டு காலத்தில் எப்போதும் நீங்கள் எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான், நடவடிக்கை எடுக்கவில்லை.

வாதி உங்கள் நிறுவன தகவல்களை எடுத்துச் சென்றுவிட்டார் என்பதை காட்டும் விதமாக ஆவணங்கள் எதுவும் இவ்வழக்கில் நீங்கள் சமர்ப்பிக்கவில்லை என்று சொன்னால் சரிதான், சமர்ப்பிக்கவில்லை.

வாதியின் செயலால் உங்களுக்கு ஐந்து லட்ச ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டு எதிர்வழக்குரையில் எதிரிடைப்பரிகாரம் கோரியுள்ளீர்கள், அதை காட்டும் விதமாக ஆவணங்கள் எதையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான், தாக்கல் செய்யவில்லை.

வாதி உங்கள் நிறுவனத்தில் consultant-ஆக பணியாற்றி வரும் வரை விசுவாசமாக இருந்து வந்தார், அவர் அவருக்கு சேர வேண்டிய பாக்கி தொகையை கேட்டார் என்பதற்காக மட்டுமே அவர் மீது உங்கள் நிறுவனத்தில் இருந்து ஆவணங்களை எடுத்துச் சென்று விட்டார் என்று பொய்யான குற்றச்சாட்டை கூறுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

வாதி இவ்வழக்கில் கோரியுள்ள தொகையை வட்டியுடன் செலுத்த நீங்கள் கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல.

நீங்கள் கேட்டுள்ள எதிரிடை கோரிக்கையும் உங்களுக்கு சட்டப்படி கிடைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை நிறைவுற்றது.

Sd/-K.Hariharan
Judge,
Commercial Court
(District Judge Cadre),
Coimbatore.